**O.S.No.94/2013**

வா.சா.2, திரு.லிங்கதுரை
நாள் : 27.04.2026 நேரம் :11.13 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1. உத்தமன் என்பவர் என் உடன்பிறந்தவர் என்றால் சரிதான். அவரது மனைவி இந்திராணி இந்த வழக்கில் 4ம் வாதி என்றால் எனக்கு தெரியவில்லை. உத்தமன் எனது அண்ணண் என்றால் சரிதான். அவர் செல்வவிநாயகபுரத்தில் உள்ளார். அவர் திருச்சுழியில் பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்றுள்ளார். தாவா வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாலுச்சாமி, விளங்கார் சந்திரன் நாகராஜன் இந்திராணி வள்ளிமயில் ஆகியோர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இந்திராணி என்பவர் யார் என்றால் என் அண்ணன் மனைவி. நான் வெளிநாட்டியில் இருந்தேனா என்றால் இருந்தேன். நான் இந்தியாவிற்கு வந்து 5 வருடங்கள் ஆகிவிட்டது. 2020 ஆண்டு கோவிட் Lock down சமயத்தில் வந்தேன். நான் வெளிநாட்டிற்கு எப்போது சென்றேன் என்றால் 1997 ஆம் வருடன் சென்றேன். 2020 ஆம் வருடத்திற்கு முன்பு எப்போது இந்தியா வந்தேன் என்றால் எனக்கு நினைவில்லை. பொதுவாக 2 வருடங்களுக்கு ஒரு முறை வருவேன். 2013ம் வருடன் நான் எங்கிருந்தேன் என்றால் விடுமுறையில் இந்தியாவில் இருந்தேன். எந்த மாதம் என்று ஞாபகம் இல்லை. எனது பாஸ்போட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் நான் எந்த மாதங்களில் இந்தியாவில் இருந்தேன் என்பது தெரியும் என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொன்னது என்றால் நான் சொன்னதை தான் எனது வழக்கறிஞர் குறிப்பிட்டுள்ளார். தாவா சொத்து வாதிகளுக்கு எவ்வாறு பாத்தியம் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியும். கருப்பாயி மகள் முனியம்மாள் வகைறயாவிடம் இருந்து தான் வாதிகளுக்கு தாவா சொத்து பாத்தியமாகும்.

முனியம்மாளின் வாரிசுகள் தான் பாலுச்சாமி வகையறா ஆவர். முனியம்மாளுக்கு எவ்வாறு தாவா சொத்து பாத்தியம் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள 1910ம் வருட கிரைய பத்தியரம் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரம் பற்றி விவரங்கள் யார் சொன்னது என்றால் கிராமத்தில் பேசிக்கொள்வார்கள் அதனால் எனக்கு தெரியும். தாவா சொத்து உள்ள பகுதியில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளதா என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே சற்று தள்ளி நான் குடியிருந்து வருகிறேன். மேற்படி சொத்து எனக்கு பூர்விக பாத்தியமாகும். எனது தாத்தா வேலாயுதம் என்றாலும் அவரது மனைவி ராமாயி என்றாலும் சரிதான். எனது தாத்தா மற்றும் அவரது மனைவி கருப்பணன் மற்றும் பெருமாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது சொத்தின் பழைய சர்வே எண் 14. தற்போதைய நத்தம் சர்வே எண் எனக்கு நினைவில்லை. பெருமாள் மற்றும் கருப்பணன் அவள்களது சொத்துகளின் கிழக்கே உள்ள பகுதியை பாதையாக்கி மேற்கே உள்ள சொத்துக்களை பிளாட்டுகளாக விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. பெருமாள் மற்றும் கருப்பணன் அவர்களது சொத்தின் தெற்கு எல்லை வரை கிழக்கே உள்ள தெரு அமைந்துள்ளது என்றால் சரிதான். தெருவின் தற்போதைய சர்வே எண் 351 என்றால் எனக்கு நினைவில்லை. பாலுசாமி வகையறாவின் தென்மேற்கு மூலையில் புளியமரம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள். புளிமரத்தோடு வாதிகளின் அனுபவம் முடிந்து விடுகிறது என்றால் சரிதான். வாதிகள் மற்றம் பிரதிவாதிகளுக்கு இடையில் எல்லை பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். எவ்வளவு காலமாக உள்ளது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் 20 வருடங்களாக பிரச்சனை உள்ளது. 1ம் பிரதிவாதி லட்சுமி தனக்கு நத்தம் நிலவரி திட்டத்தில் பட்டா குறைவான விஸ்தீரணத்தில் வழங்கப்பட்டுள்ளதாக பரமக்குடி கோட்டாட்சியரிடம் வழக்கு

தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் பட்டா குறைவான விஸ்தீரணத்தில் வழங்கப்பட்டுள்ளதாக நடவடிக்கை எடுத்துள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. 2013 ஆம் ஆண்டு பிரதிவாதிகள் கல் ஊன்றியதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறு தான் கேள்விபட்டேன். மேற்படி விவரத்தை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் பிரதிவாதிகள் கல் ஊன்றி 1 மாதத்த்திற்குள் தெரிந்து கொண்டேன், அப்போது நான் வெளிநாட்டில் இருந்தேன். பொதுவாக எல்லை சம்மந்தமாக இருதரப்பினரின் முன்னிலையில் கல் ஊன்றப்பட்டால் எல்லை கல்லை தாண்டி மற்ற தரப்பினருக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். கல் ஊன்றியது சம்மந்தமாக காவல் துறையில் வாதிகள் புகார் கொடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாதிகள் கோவிலுக்கு போன சமயத்தில் பிரதிவாதிகள் இரவோடு இரவாக 2013 ம் வருடம் தாவா சொத்தில் கல் ஊன்றி விட்டார்கள் என்று நான் குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல.

5. வாதிகளின் சர்வே எண் 352/1 என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சர்வே எண் 352/4 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளின் சொத்திற்கு தென்புறம் பிரதிவாதிகளின் சொத்து உள்ளதா என்றால் சரியல்ல. ஜெகநாதன் மற்றும் அவரது மனைவி அமிர்தவள்ளி சொத்து உள்ளது. அமிர்தவள்ளி மற்றும் ஜெகநாதன் என்பவர் பிரதிவாதியின் சித்தப்பா என்றால் உறவு முறை தெரியாது. அமிர்தவள்ளி மற்றும் ஜெகநாதன் வீடு தென்வடல் பாதையை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். அமிர்தவள்ளி மற்றும் ஜெகநாதன் வீட்டிற்கு மேற்கே கம்பி வேலி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கம்பிவேலிக்கு மேற்கே கருவேல மரங்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கருவேல மரங்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும் போது நான் இருந்தேனா என்றால் இல்லை.

6. எனது சகோதரர் உத்தமன் வருவாய்துறையில் பணிபுரிடநது ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். உத்தமனின் செல்வாக்கை பயன்படுத்தி வாதிகளுக்கு வழுங்கப்பட்ட விஸ்தீரணம் 552 மீட்டரை 880 மீட்டராக பட்டா வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. அதே போல் பிரதிவாதிகளின் விஸ்தீரணத்தை 1790 சதுர மீட்டரை 1535 ச.மீ ஆக குறைத்து பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வாதிகளின் சொத்திற்கு தென்புறம் பிரதிவாதிகளின் சொத்து இருப்பதை வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிகளின் நெருங்கிய உறவினர் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மற்றும் அவரது தகப்பனார் சென்னை காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள் என்றால் சரிதான். அதேபோல் என்னுடன் உடன்பிறந்த அண்ணன் வாசு என்பவரும் முதுகுளத்தூரில் காவல் துறையில் பணிபுரிந்தாரா என்றால் சரிதான். ஆனால் முதுகுளத்தூரில் பணிபுரியவில்லை.

**(2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை 3 முதல் 5 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.)**

**மறு விசாரணை இல்லை**

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.50 AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.04.27 12:32:32 +0530